CC 88/2015

06.07.2023

ம.சா.1,

பெயர்: சதீஷ்குமார்

த/பெ. முத்துச்சாமி

ம.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

**முதல் விசாரணை தொடர்ச்சி**

கடந்த 26.08.2013 ம் தேதியிட்ட தகவல் அறியும் உரிமச் சட்டத்தின் படி New India Assurance Company கொடுத்த தகவல் கடிதம் ம.சா.ஆ.1 ஆகும். 30.12.2013 ம் தேதியிட்ட பொள்ளாச்சி கிளை New India Assurance Company ல் வழங்கப்பட்ட கடிதம் ம.சா.ஆ.2 ஆகும்.

02.01.2014 ம் தேதியிட்ட பொள்ளாச்சி கிளை New India Assurance Company வழங்கப்பட்ட கடிதம் **ம.சா.ஆ.3** ஆகும்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது New India Assurance Company முகவராக பணியில் உள்ளேன் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் 2011 -2012 ம் ஆண்டின் நிதியாண்டு என்பது 01.04.2011 முதல் 31.03.2012 வரை என்றால் சரிதான். அதே போல் 2012 -2013 ம் ஆண்டின் நிதியாண்டு என்பது 01.04.2012 முதல் 31.03.2013 வரை என்றால் சரிதான்.

ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தொகை பிரிமியம் வசூல் செய்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2011 -2012 நிதியாண்டில் ஒவ்வொரு மாதமும் வசூலித்த தொகையில் 2012 - 2013 நிதியாண்டில் எந்த ஒரு மாதத்தில் ரூ.5 இலட்சத்திற்கும் அதிகமாக பிரிமியம் வசூலிக்கும் பட்சத்தில் ஒரு கிராம் தங்கம் தருவதாக அறிவித்திருந்தார்கள் என்றால் சரிதான்.

2012 - 2013 நிதியாண்டில் மார்ச் மாதம் ரூ.2,39,186/- பிரிமியமாக வசூல் செய்தேன் என்றால் சரிதான். 2012 - 2013 மார்ச் மாத பிரிமியத் தொகை தான் நான் வசூல் செய்த தொகையில் அதிகபட்ச தொகை என்றால் சரிதான். பாலிசிதாரர்களுக்கு இத்திட்டத்தினால் எந்த ஒரு லாபம் நஷ்டம் இல்லை என்றால் சரிதான்.

எனது புகாரில் 03.01.2013 ம் தேதி ஒரு கிராம் தங்க நாணயம் வழங்குமாறு கேட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு எனது புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. முகவர் கூட்டம் முடிந்து மறுநாள் 04.01.2013 ம் தேதி பொள்ளாச்சி மகாலிங்கபுரத்தில் இருக்கும் அலுவலகத்தில் 11.00 மணிக்கு ஒரு கிராம் தங்க விசயமாக சென்று கேட்டேன் என்று எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் கேட்டபோது 1ம் எதிரி அலுவலகத்தில் இல்லை, திருப்பூரில் இருந்தார் என்றால் சரிதான். பரிசுத்தொகை அறிவித்த 12.06.2012 ம் தேதியில் எனக்கு ஒரு கிராம் கிடைக்க தகுதி இல்லை என்றால் சரிதான். எதிர்காலத்தில் எப்போது நான் இலக்கை அடைக்கிறேனோ அந்த தேதியில் தான் எனக்கு பரிசு பெற தகுதி வரும் என்றால் சரிதான்.

12.06.2012 பிறகு அடுத்த கூட்டம் 24.07.2012 ல் நடந்தது என்றால் சரிதான். 24.07.2012 ல் அறிவிக்கப்பட்ட பரிசு திட்டத்தினை ரத்து செய்ததாக அறிவிப்பு செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் யாரும் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை என்றாலும், எதிரிகளை அழைக்ககழிக்க வேண்டி பொய்யாக புகாரினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**
Judicial Magistrate No. II,
Pollachi.